செ.வெ.எண் 12 நாள்: 08.10.2020

## பெரம்பலூர் மாவட்டம்

# வன உயிரின வார நிறைவு விழாவை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா, இ.ஆ.ப அவர்கள் மரக்கன்றுகளை நடவு செய்யும் பணியை துவக்கி வைத்தார்.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து டாக்டர் எம்.ஜி.ஆர். விளையாட்டு மைதானம் வரை உள்ள சாலையில் வன உயிரின வார நிறைவு விழாவை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா, இ.ஆ.ப அவர்கள் இன்று (08.10.2020) மரக்கன்றுகளை நடவு செய்யும் பணியினை துவக்கி வைத்தார்.

**இந்நிகழ்வைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா, இ.ஆ.ப அவர்கள் தெரிவிக்கையில்,**

சுற்றுப்புற சூழ்நிலைகளை தூய்மையாக பாதுகாத்திடவும், மனிதர்கள் உயிர் வாழத் தேவையான பிராண வாயுவை பெருக்கிடவும் காடுகளின் பரப்பளவு முக்கிய பங்காற்றுகிறது. வன விலங்குகளை பாதுகாத்திடவும், காடுகளின் பசுமைப் போர்வையினை அதிகரித்திடவும், மத்திய, மாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. பொதுமக்கள் காடுகளை பராமரிக்கவேண்டியதன் அவசியங்களை அறிந்துகொள்வதற்காக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. இதனடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 2 முதல் அக்டோபர் 8 வரை வன உயிரின வார விழா அனுசரிக்கப்பட்டு, பல்வேறு நிகழ்ச்சிகளின் மூலம் காடுகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

பெரம்பலூர் மாவட்டத்தில் 16,700 ஹெக்டேர் பரப்பளவில் வனக்காடுகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதனை பாதுகாத்திடவும், மேலும் காடுகளின் பரப்பளவை அதிகரித்திடவும், மாவட்ட வனத்துறை மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் அடர் காடுகள் வளர்ப்பு, காலியிடங்களில் மரக்கன்றுகளை நடவு செய்து வளர்த்தல், சாலையோரங்களில் பசுமைவெளியை ஏற்படுத்துதல் நெகிழிப் பைகளை தவிர்த்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வனவிலங்குகள் காடுகளிலிருந்து தண்ணீர் தேடி தரைப்பகுதிக்கு வருவதை தவிர்ப்பதற்காக பண்ணைக் குட்டைகள் மற்றும் குடிநீர் தொட்டிகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் தற்போது மங்களம் காப்புக்காட்டில் ரூ.6.6 லட்சம் மதிப்பீட்டில் பண்ணைக் குட்டையும், புலியூர்காப்புக் காட்டில் ரூ.3.3 லட்சம் மதிப்பீட்டில் குடிநீர் தொட்டியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மரக்கன்றகளை நடவு செய்வதற்காக மாவட்ட வனத்துறையின் மூலம் தேக்கு, நெல்லி, நாவல், புங்கன், மாதுளை, செம்மரம் புலி, போன்ற மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு, விவசாயிகள் மூலம் 19,000 மரக்கன்றுகளும், பொதுமக்கள் மூலம் 40,000 மரக்கன்றுகளும் நடவு செய்யப்பட உள்ளது.

காடுகள் குறித்த அவசியம் மற்றும் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட பள்ளி மாணவ, மாணவிகள் பங்கேற்கும் கவிதை, கட்டுரை, மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டு, அதில் தேர்வாகும் மாணவர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது. தற்போது கொரோனா தொற்றின் காரணமாக மாணவ, மாணவிகள் நேரடியாக போட்டிகளில் பங்கேற்பதை தவிர்த்து இணையத்தின் வாயிலாக ஓவியப் போட்டி நடத்தப்பட்டு, முதல் 3 இடங்களில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகள் சென்னை வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் மாநில அளவில் நடத்தப்படும் போட்டிகளில் பங்கேற்க அனுப்பப்பட்டுள்ளனர். மற்றவர்களுக்கு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மூலம் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது. எனவே பொதுமக்கள் காடுகள் பராமரிப்பின் அவசியம் கருதி இப்பணியில் தங்களையும் ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா, இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வன அலுவலர் த. இளங்கோவன், வருவாய் கோட்டாட்சியர் சக்திவேல், வனச்சரக அலுவலர்கள் சசிக்குமார், ராஜசேகர், மாதேஸ்வரன் உள்பட வனத்துறையைச் சேர்ந்த அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.